உ

# பாராட்டு விழா

4–5–74



"தங்கம்மா தமிழர் பெற்ற
தனிப்பெருஞ் செல்வி வாழி!"

துர்க்காதேவி ஆலய
நிர்வாக சபை
தெல்லிப்பழை

உ

பண்டிதை, சைவப்புலவர், செஞ்சொற் செம்மணி, சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்தஞானகரம், சைவதரிசினி, திருவாசகக் கொண்டல், திருமுறைச் செல்வி, சிவமயச் செல்வி, சிவஞானவித்தகர்

# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்கூறும் நல்லுலகெங்கணும்
மேன்மைகொள் சைவநீதி விளங்கவும் செந்தமிழ்மொழி துலங்கவும்
நாளும் பொழுதும் நற்பணியாற்றி வருவது குறித்து மகிழ்ந்து

**துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர் தேவியின் அடியார்கள் சார்பாக**

ஆனந்த ஆண்டு சித்திரைத் திங்கள் 21ஆம் நாள்
(4 – 5 – 74) சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு
துர்க்காதேவி ஆலய திருமுறை மட முன்றிலில்

**செல்வி அவர்களைக் கௌரவிக்குமுகமாகப் பாராட்டுவிழா எடுத்தஞான்று**
பாடி வழங்கிய

# வாழ்த்துப் பா

உன்னுவான் தெய்வ நீதி ஊன்றிய செல்வ நாடு
மன்னுயாழ்ப் பாண நங்கை மாறிலாத் தவத்தாற் பெற்ற
தன்னிலே நிறைந்த செல்வி தங்கம்மா தன்னைத் துர்க்கை
யன்னையை யாமும் வேண்டி அன்புடன் வாழ்த்து வாமே. 1

நிதிமிகு கருத்தால் நெஞ்சு நெகிழ்விரி வுரையால் விஞ்சு
மதிநல வளத்தாற் கொஞ்சு மணிக்குரல் திறத்தாற் செஞ்சொல்
அதிமது ரமதால் பத்தி விளைத்திடு மழகால் அம்ம
புதுநலம் தருவாய் உண்மைப் பொருளறி திருவே வாழி. 2

ஐவரை அடக்க வல்ல ஆற்றலைத் தரும்நின் பேச்சுப்
பொய்வகை போக்க வல்ல புத்தியைத் தரும்நின் பேச்சு
செய்வகை தெளிய வல்ல செம்மனம் தரும்நின் பேச்சு
தெய்வநல் வாழ்வை ஏற்றும் செல்விதங் கம்மா வாழி. 3

தேனமு தென்பர் ஊறும் செழுங்கனி யமுத மென்பர்
வானமு தென்பர் நன்கு வடித்தசெங் கரும்பென் றூர்ப்பர்
வானவர் தாமுந் துள்ளி வருவர்நின் மதுரத் தீஞ்சொல்
லானநல் லமுத முண்ண அருந்தமிழ்ச் செல்வி வாழி. 4

தேவர்கள் களிக்கச் சொல்வாய் சிவனுளம் மகிழச் சொல்வாய்
நாவலர் வியக்கச் சொல்வாய் நால்வரும் உவக்கச் சொல்வாய்
பாவலர் பாடச் சொல்வாய் பத்தர்கள் ஆடச் சொல்வாய்
ஆவியும் குளிரச் சொல்வாய் ஆகமச் செல்வி வாழி. 5

சின்னமே ளங்கள் வேண்டாம் சிறுகளி யாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம் வாணவே டிக்கை வேண்டாம்
மன்னுபேர் தங்கம் மாவை வரவழைத் திடுக வென்பார்
இன்னதோர் மாற்றம் நேர எழுந்தனே இனிது வாழி. 6

மருத்துவ நிபுண ருக்குப் பொறியியல் வல்லு நர்க்குக்
குருத்தொழி லாள ருக்குக் குறித்துயர் படிப்புக் காண்பார்
சரித்திரம் இன்று மாறித் தங்கம்மா வுக்குக் கற்க
வரித்தெழும் பலரைக் கண்டோம் வளர்கலை வல்லி வாழி. 7

தங்கம்மா என்றால் தொண்டு தங்கம்மா என்றாற் பண்பு
தங்கம்மா என்றாற் சக்தி தங்கம்மா என்றாற் பத்தி
தங்கம்மா என்றாற் சைவம் என்றெல்லாந் தரணி காணும்
தங்கம்மா தமிழர் பெற்ற தனிப்பெருஞ் செல்வி வாழி. 8

நேரமும் நோக்க லின்றி யுடல்நிலை பேண லின்றித்
தூரமுந் தூக்க லின்றிச் சூழலை யாய்த லின்றி
ஈரநன் னெஞ்ச முந்த இறைவனின் தொண்டு செய்யும்
வீரமிங் கெம்ம னோரால் விளம்புதற் கெளிதோ வாழி. 9

திருமுறை மடம மைத்துத் திகழ்மறை யாக மத்துப்
பொருள்நனி விரித்து ரைத்துப் புதுப்பரம் பரைவ ளர்த்து
வரும்பணி யுரத்தில் வாழ்வு வளந்தரப் பெறுசை வத்துத்
திருநலம் செழிக்கச் செய்யும் திருப்பெருந் தேவி வாழி. 10

இன்றமிழ் நாடு தோறும் எழில்மலா யாசிங் கப்பூர்
சென்றுசென் றெங்கள் சைவத் திறனுரைத் தவரை யெல்லாம்
வென்றுவென் றிலங்கும் வல்ல வித்தகி இன்று சைவ
மன்றுறைக் குறுபே ராசி ரியையும்நீ யானாய் வாழி. 11

நாவலர் மரபில் வந்த நாநலச் செல்வி சைவக்
காவல ராக வின்று காண்கின்றோம் நின்னை உண்மைப்
பாவலர் பாட வல்ல பணிபல புரிந்த தாலே
மேவுயர் நலங்கள் பெற்று மிகுநெடுங் காலம் வாழி. 12

செந்தமிழ்ச் செல்வி வல்ல திருமுறைச் செல்வி நல்ல
சிந்தனைச் செல்வி துர்க்கை தெரிந்தருள் பொழியும் செல்வி
மந்திர சக்தி வாய்ந்த மங்கையர் திலகம் எங்கள்
வந்தனைக் குரிய தேவி யருண்மொழி அரசி வாழி. 13

மனநலம் படைத்தாய் வாழி மதிநலம் படைத்தாய் வாழி
இனநல முடையாய் வாழி இறையருட் கொடையே வாழி
தனியொரு மகளாய்ச் சைவத் தமிழ்வளர்க் கின்றாய் வாழி
அனைவரும் வாழ்த்த வாழி ஆண்டவன் அருளால் வாழி. 14

பாடியவர்:

கவிஞர் வி. கந்தவனம்

குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்— 38/4-74